சிறப்பு மாவட்ட நீதிமன்றம், (இயக்கவூர்தி விபத்துக் கோருரிமை வழக்குகள் தீர்ப்பாயம்),மதுரை.

முன்னிலை திருமதி.N. நாகலெட்சுமி, எம்., பி.எல்.,
சிறப்பு மாவட்டநீதிபதி, மதுரை.

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ம் நாள் வியாழக்கிழமை

**எம்.சி.ஓ.பி.எண்.825/2023**
**CNR.No.TNMD0D0006042023**

மற்றும்

**எம்.சி.ஓ.பி.எண்.1167/2023**
**CNR.No.TNMD0D0008592023**

**எம்.சி.ஓ.பி.எண்.825/2023:-**

1.விருதுநகர், திருச்சுழி தாலுகா, நரிக்குடி, வீரக்குடி, வேம்பங்குடி, கதவு எண்.3/152ஏ என்ற விலாசத்தில் வசிக்கும் கருப்பையா அவர்கள் மகள் இந்து வயது சுமார் 30 உள்ள சக்தீஸ்வரி

2.விருதுநகர், மேலராங்கியம், பூம்பிடாகை, கதவு எண்.116 என்ற விலா சத்தில் வசிக்கும் பாண்டி அவர்கள் மகன் இந்து வயது சுமார் 52 உள்ள கருப்பசாமி

3.விருதுநகர், மேலராங்கியம், பூம்பிடாகை, கதவு எண்.112 என்ற முகவரி யில் வசிக்கும் கருப்பசாமி அவர்கள் மகன், இந்து சுமார் 32 உள்ள சிவக்குமார்

4.விருதுநகர், மேலராங்கியம், பூம்பிடாகை, கதவு எண்.112 என்ற முகவரி யில் வசிக்கும் கருப்பசாமி அவர்கள் மகன் இந்து சுமார் 27 உள்ள காந்திராஜா

5.மதுரை-625003, பழங்காநத்தம், இருளப்பசாமி தெரு என்ற விலா சத்தில் வசிக்கும் காளிதாஸ் அவர்கள் மனைவி இந்து ஜான்சிராணி

...மனுதாரர்கள்

/எதிராக/

1. மதுரை, வடக்குவெளிவீதி, எண்.3ஏ என்ற முகவரியில் இயங்கி வரும் நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அதன் கிளை மேலாளர் மூலமாக.

2. மதுரை, பைபாஸ் ரோட்டில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் அதன் நிர்வாக இயக்குநர் மூலமாக

... எதிர்மனுதாரர்கள்

**எம்.சி.ஓ.பி.எண்.1167/2023:–**

1. விருதுநகர், மேலராங்கியம், பூம்பிடாகை, கதவு எண்.112 என்ற முகவரியில் வசிக்கும் முனியாண்டி அவர்கள் மகன், இந்து சுமார் 62 உள்ள பாண்டி

2. விருதுநகர், மேலராங்கியம், பூம்பிடாகை, கதவு எண்.112 என்ற விலாசத்தில் வசிக்கும் பாண்டி அவர்கள் மனைவி இந்து வயது சுமார் 58 உள்ள பேச்சி ...மனுதாரர்கள்

/எதிராக/

1. மதுரை, வடக்கு வெளிவீதி, எண்.3ஏ என்ற முகவரியில் இயங்கி வரும் நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அதன் கிளை மேலாளர் மூலமாக

2. மதுரை, பைபாஸ் ரோட்டில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் அதன் நிர்வாக இயக்குநர் மூலமாக

3. விருதுநகர் மாவட்டம், திருச்சுழி, பூம்பிடாகை, கதவு எண் 1/116 என்ற விலாசத்தில் வசிக்கும் கார்த்திக் அவர்கள் மனைவி இந்து வயது சுமார் 24 உள்ள சத்தீஸ்வரி

4. விருதுநகர் மாவட்டம், திருச்சுழி, பூம்பிடாகை, கதவு எண்.1/116 என்ற விலாசத்தில் வசிக்கும் கார்த்திக் அவர்கள் தாயாரும் கருப்பசாமி அவர்களின் மனைவி இந்து வயது சுமார் 56 உள்ள சொக்கம்மாள்(இறப்பு) ... எதிர்மனுதாரர்கள்

இவ்விரண்டு மனுக்களும் என் முன்பாக 30.10.2025–ம் தேதி அன்று இறுதி விசாரணைக்கு வர பெற்று இவ்விரண்டு மனுக்களில் மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. M.வேல்முருகன் அவர்கள் முன்னிலையாகியும், இவ் விரண்டு மனுக்களின் 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S. சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக் குரைஞர் திரு.T.நாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும், எம்.சி.ஓ.பி. எண். 1167/ 2023 மனுவில் 3, 4 எதிர்மனுதாரர்களை நீதிமன்றம் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்ட நிலையிலும்,

இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலித்தும், இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**பொதுவான உத்தரவு**</u>

<u>**எம்.சி.ஓ.பி.எண்.825/2023:–**</u>

இம்மனுவின் மனுதாரர்கள் இறந்து போன கார்த்திக் என்பவருக்கு ஏற்பட்ட சாலை விபத்து காயத்திற்காக இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்ட பிரிவுகள் 164, 166 மற்றும் 182–ஏ–ன் படியும், r/w விதி 3(1)–ன் படியும், திருந்திய சட்டம் 32/2019–ன் கீழ் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

<u>**எம்.சி.ஓ.பி.எண்.1167/2023:–**</u>

இம் மனுவின் மனுதாரர்கள் இறந்து போன அழகர் (எ) கண்ணன் என்பவரின் சாலை விபத்து காயத்திற்காக இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்ட பிரிவுகள் 163 ஏ, 164, 166 மற்றும் 182 ஏ–ன் படியும், r/w விதி 3(1)–ன் கீழ் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

<u>**2. எம்.சி.ஓ.பி.எண்கள்.825/2023 மனுவின் சுருக்கம் :–**</u>

இம் மனுவில் 1-ம் மனுதாரர் இறந்து போன கார்த்திக் என்பவரின் மனைவி ஆவார். 2-ம் மனுதாரர் இறந்து போன கார்த்திக் என்பவரின் தகப்பனார் ஆவார். 3 முதல் 5 மனுதாரர்கள் இறந்து போன கார்த்திக் என்பவரின் சகோதர, சகோதரிகள் ஆவார்கள். கடந்த 20.01.2020-ம் தேதி அன்று 1-ம் மனுதாரரின் கணவர் கார்த்திக் அவரது நண்பரான அழகர் (எ) கண்ணன் என்பவர் வேலை விசயமாக மதுரைக்கு செல்வதற்காக 1-ம் மனுதாரரின் கணவர் கார்த்திக் என்பவருக்கு சொந்தமான TN-67-BX-6318

என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தினை கார்த்திக் ஓட்ட, அவரது நண்பர் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருக்கையில், இரவு சுமார் 9.15 மணியளவில் மேலக்கால் மெயின்ரோடு, கொடிமங்கலம் நாடார் தெரு அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்த சமயத்தில் எதிர்திசையில் வந்த 2-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-58-N-1869 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து, 1ம் மனுதாரரின் கணவர் ஓட்டிச் சென்ற வாகனத்தில் நேருக்கு நேர் அதிவேகமாக மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் கார்த்திக் தூக்கி வீசப்பட்டு படுகாயமுற்று, சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். இரு சக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த அழகர் (எ) கண்ணன் என்பவர் படுகாயமுற்று சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். மேற்படி விபத்திற்கு மதுரை மாவட்டம், நாகமலை புதுக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.27/2020-ல் இ.த.ச.பிரிவுகளான 304(ஏ)-ன்கீழ் இறந்துபோன கார்த்திக் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இறந்து போன கார்த்திக் என்பவர் கொத்தனார் வேலை பார்த்து மாதம் ரூ.25,500/- சம்பளம் பெற்றுவந்தார். மேற்படி விபத்திற்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ இழப்பீடு செலுத்தக் கடமைப்பட்டவர்கள் ஆவார். இம்மனுவின் மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை ரூ.50,00,000/-கோரி மனு தாக்கல் செய் துள்ளனர்.

3.**<u>எம்.சி.ஓ.பி.எண்கள்.1167/2023 மனுவின் சுருக்கம் :–</u>**

இம் மனுவில் 1, 2 மனுதாரர்கள் இறந்து போன அழகர் (எ) கண்ணன் என்பவரின் பெற்றோர் ஆவார். கடந்த 20.01.2020 தேதி அன்று மனுதாரர்களின் மகன் அழகர் (எ) கண்ணன் அவரது நண்பரான கார்த்திக் என்பவருடன் வேலை விசயமாக மதுரைக்கு செல்வதற்காக

இறந்துபோன கார்த்திக் என்பவருக்கு சொந்தமான TN-67-BX-6318 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தினை கார்த்திக் ஓட்ட, இறந்து போன அழகர் (எ) கண்ணன் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருக்கையில், இரவு சுமார் 9.15 மணியளவில் மேலக்கால் மெயின்ரோடு, கொடிமங்கலம் நாடார் தெரு அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்த சமயத்தில் எதிர்திசையில் வந்த 2-ம் எதிர் மனுதாரருக்கு சொந்தமான TN-58-N-1869 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தும், கார்த்திக் என்பவர் ஓட்டிச் சென்ற வாகனமும் நேருக்கு நேர் அதிவேகமாக மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் அழகர் (எ) கண்ணன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். வாகனத்தை ஓட்டி வந்த அவரது நண்பரான கார்த்தி என்பவர் படுகாயமுற்று சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மேற்படி விபத்திற்கு மதுரை மாவட்டம், நாகமலை புதுக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.27/2020ல் இ.த.ச.பிரிவுகளான 304(ஏ)-ன்கீழ் இறந்துபோன கார்த்திக் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இறந்து போன அழகர் (எ) கண்ணன் என்பவர் கொத்தனார் மற்றும் விவசாய கூலி வேலை பார்த்து மாதம் ரூ.25,500/- சம்பளம் பெற்று வந்தார். மேற்படி விபத்திற்கு 1, 2 எதிர் மனுதாரர்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ இழப்பீடு செலுத்தக் கடமைப் பட்டவர்கள் ஆவார். இம்மனுவின் மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை ரூ.50,00,000/- கோரி மனு தாக்கல் செய்துள்ளனர்.

4) **<u>எம்.சி.ஓ.பி.எண்.825/2023 மற்றும் 1167/2023 மனுக்களின் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:-</u>**

மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவைகள் 2-ம்

எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மனு சட்டப்படியும் சங்கதிகள் படியும் நிலைக்கத் தக்கதல்ல. கடந்த 20.01.2020–ம் தேதி அன்று 1–ம் மனுதாரரின் கணவர் கார்த்திக் அவரது நண்பரான அழகர் (எ) கண்ணன் என்பவர் வேலை விசயமாக மதுரைக்கு செல்வதற்காக 1–ம் மனுதாரரின் கணவர் கார்த்திக் என்பவருக்கு சொந்தமான TN–67–BX–6318 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தினை கார்த்திக் ஓட்ட, அவரது நண்பர் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருக்கையில், இரவு சுமார் 9.15 மணியளவில் மேலக்கால் மெயின்ரோடு, கொடிமங்கலம் நாடார் தெரு அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்த சமயத்தில் எதிர்திசையில் வந்த 2–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–58–N–1869 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தும் 1–ம் மனுதாரரின் கணவர் ஓட்டிச் சென்ற வாகனமும் நேருக்குநேர் அதிவேகமாக மோதி விபத்து ஏற்பட்டது என்பது உண்மையல்ல. விபத்தில் காயம்பட்ட கார்த்திக், அழகர் (எ) கண்ணன் ஆகிய இருவரையும் 1–ம் எதிர்மனுதாரரின் அரசுப் பேருந்தின் ஓட்டுநர் 108 ஆம்புலன்ஸ்–க்கு தகவல் சொல்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து பின்னர் விபத்து குறித்து நாகமலைக் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து TN–67–BX–6318 என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் கார்த்திக் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், அழகர் என்ற கண்ணன் கார்த்திக் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் பின்னால் வந்து பயணம் செய்த நபர் என்றும், TN–67–BX–6318 என்ற இரு சக்கர வாகனமானது 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தையும் மனுவில் எதிர்மனுதாரராக சேர்த்து இழப்பீடு கோரியிருப்பது சட்டப்படி

ஏற்புடையதல்ல. விபத்துக்கு காப்பீட்டு நிறுவனம் மட்டுமே இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் ஆவர். அரசு பேருந்தின் நிறுவனமானது இறந்தவர்களுக்கு சட்டப்படி இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல. எனவே மனுதாரர்கள் இழப்பீடு பெறுவதற்காக பல்வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு கோரியுள்ளார். இறந்து போனவரின் வயது, தொழில், மாத வருமானம் ஈட்டும் திறன் ஆகியவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரர்கள் அதிகப்படியான இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே 2–ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**5) <u>எம்.சி.ஓ.பி.எண்கள்.825/2023 மற்றும் 1167/2023 மனுவின் 1–ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவைகள் 1–ம் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மனு சட்டப்படியும் சங்கதிகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. பதிவு எண்.TN–67–BX–6318 என்ற எண்ணைக் கொண்ட வாகனம், விபத்தின் போது 1–ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், வாகனத்தின் பின்னால் அமர்ந்திருப்பவர் 3–ம் தரப்பினர் என்பதையும் மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்களாவர். மோட்டார் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. 2–ம் எதிர்மனுதாரரான தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அலட்சியத்தால் மட்டுமே விபத்து ஏற்பட்டது. விபத்துக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் எந்தப் பொறுப்பையும் ஏற்கவில்லை என்பது உண்மையல்ல. விபத்துக்கு பேருந்தின் ஓட்டுநர் மட்டுமே பொறுப்பு என்பதால், 1–ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்த இழப்பீடும் செலுத்த

கடமைப்பட்டவர் அல்ல. மனுதாரர்கள் இழப்பீடு பெறுவதற்காக பல்வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு கோரியுள்ளார். இறந்து போனவரின் வயது, தொழில், மாத வருமானம் ஈட்டும் திறன் ஆகியவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரர்கள் அதிகப் படியான இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே 1–ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**6) இவ்விரண்டு வழக்குகளில் தீர்மானிக்கவேண்டியவை:**

1) விபத்து யாருடைய கவனக் குறைவால் ஏற்பட்டது?

2)எம்.சி.ஓ.பி.எண்.825/2023,மற்றும்1167/2023மனுவின் மனுதாரர்களுக்கு யாரால் இழப்பீடு வழங்க வேண்டும்?

3)எம்.சி.ஓ.பி.எண்.825/2023 மனுவின் மனுதாரர்களுக்கு வழங்கப் பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

4)எம்.சி.ஓ.பி.எண்.1167/2023மனுவின் மனுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

5)இவ்விரண்டு மனுக்களின் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

7) இவ்விரண்டு வழக்குகளும் ஒரே விபத்து சம்பந்தப்பட்ட வழக்கு என்பதால் ஒருசேர விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை 27.01.2025–ம் தேதி தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் மனு எண்.825/2023–ல் சாட்சிகள் விசாரணை செய்யப் பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8) எம்.சி.ஓ.பி.எண்கள்.825, 1167/2023 மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 முதல் ம.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.34 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், 1, 2

எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1 முதல் எ.ம.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். சான்றாவணமாக எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>9) பிரச்சனை 1:–</u>

இவ்விரு மனுக்களிலும், எம்.சி.ஓ.பி.எண்.825/2023 மனுவில் 1ம் மனுதாரர் இறந்து போன கார்த்திக் என்பவரின் மனைவி என்பதும், 2–ம் மனுதாரர் இறந்து போன கார்த்திக் என்பவரின் தகப்பனார் என்பதும், 3 முதல் 5 மனுதாரர்கள் இறந்து போன கார்த்திக் என்பவரின் சகோதர, சகோதரிகள் என்பதும் ம.சா.ஆ.22–ஆன வாரிசு சான்றிதழின் அடிப்படையில் தெரிய வருகிறது. எம்.சி.ஓ.பி.எண்.1167/2023 – மனுவில் 1, 2 மனுதாரர்கள் இறந்து போன அழகர் (எ) கண்ணன் என்பவரின் பெற்றோர் என்பதும் ம.சா.ஆ.12 ஆன வாரிசு சான்றிதழின் அடிப்படையில் தெரிய வருகிறது.

10. இவ்விரு மனுக்களிலும், கடந்த 20.01.2020–ம் தேதி அன்று 1–ம் மனுதாரரின் கணவர் கார்த்திக் அவரது நண்பரான அழகர் (எ) கண்ணன் ஆகியோர் வேலை விசயமாக மதுரைக்கு செல்வதற்காக 1–ம் மனுதாரரின் கணவர் கார்த்திக் என்பவருக்கு சொந்தமான TN–67–BX–6318 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் கார்த்திக் ஓட்ட, அவரது நண்பர் அழகர் (எ) கண்ணன் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருக்கையில், இரவு சுமார் 9.15 மணியளவில் மேலக்கால் மெயின்ரோடு, கொடிமங்கலம் நாடார் தெரு அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்த சமயத்தில் எதிர்திசையில் வந்த 2–ம் எதிர் மனுதாரருக்கு சொந்தமான TN–58–N–1869 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தும் 1–ம் மனுதாரரின் கணவர் ஓட்டிச் சென்ற

வாகனமும் நேருக்கு நேர் அதிவேகமாக மோதி விபத்து ஏற்பட்டதால் கார்த்திக் தூக்கி வீசப்பட்டு படுகாயமுற்று, சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என்பதும், இரு சக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த அழகர் என்ற கண்ணன் என்பவர் படுகாயமுற்று சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்பதும் மேற்படி விபத்திற்கு மதுரை மாவட்டம், நாகமலை புதுக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.27/2020–ல் இ.த.ச.பிரிவுகளான 304(ஏ)–ன்கீழ் இறந்துபோன கார்த்திக் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.1 ஆன முதல் தகவல் அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது.

11. ம.சா.1–ஆக இறந்த அழகர் (எ) கண்ணன் என்பவரின் தகப்பனார் பாண்டி என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது குறுக்கு விசாரணையில் "விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து சமயத்தில் என் மகன் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தை ஓட்டி நபரும் என் மகனும் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் காந்திராஜா என்பவர் புகார் கொடுத்தார். விபத்திற்கு காரணம் அரசு பேருந்தின் ஓட்டுநர் என சொன்னால் சரி தான்" என சாட்சியம் அளித்துள்ளார்.

12. இம்மனுவில் ம.சா.1–யை 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது "விபத்திற்கு அரசு பேருந்தின் ஓட்டுநர் காரணம் இல்லை என்பதால் 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. என் மகன் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரி யாது" என சாட்சியம்

அளித்துள்ளார்.

13. இம்மனுவில் ம.சா.2–ஆக கார்த்திக் என்பவரின் மனைவி விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது குறுக்கு விசாரணையில், "விபத்து சமயத்தில் என் கணவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் என் கணவருக்கு பாத்தியப்பட்டதாகும். சம்பவ இடத்தில் இருவரும் இறந்து விட்டதால் என் கணவருக்கு எதிராக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அரசு பேருந்து ஓட்டுநர் கொடுத்த புகாரினை மறு விசாரணை செய்யக் கோரி மற்றொரு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரி தான். எனக்கு தெரிந்த அளவில் விபத்திற்கு காரணம் அரசு பேருந்து ஓட்டுநர் ஆவார். இன்சூரன்ஸ் கம்பெனியில் எடுக்கப்பட்ட பாலிசியின் அடிப்படை யில் நான் இன்சூரன்ஸ் கிளைம் எதுவும் கோரவில்லை." என சாட்சியம் அளித்துள்ளார்.

14. ம.சா.2–யை 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது "இந்த விபத்தில் என் கணவர் சம்பவ இடத்தில் இறந்தார் என்றால் சரிதான். வாகனத்தில் என் கணவருடன் பயணம் செய்த நபரும் சம்பவ இடத்தில் இறந்தார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் கணவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் என் கணவருக்கு பாத்தியப்பட்டதாகும். அரசு பேருந்து ஓட்டுநர் புகாரை மறு விசாரணை செய்யக் கோரி மற்றொரு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இன்சூரன்ஸ் கம்பெனியில் எடுக்கப்பட்ட பாலிசியின் அடிப்படை யில் நான் இன்சூரன்ஸ் கிளைம் எதுவும் கோரவில்லை. மேற்படி காப்பீட்டு பத்திரத்திற்கு என் கணவர் 3–ம் தரப்பினர் இல்லாத நிலையில் 1–ம் எதிர்மனுதாரான காப்பீடு நிறுவனத்திற்கு எதிராக இம்மனு நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் கணவர் இரு சக்கர

வாகனத்தை அதிவேகமாக ஓட்டிச் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து குறித்து மறு விசாரணை செய்யக் கோரி காந்திராஜா என்பவர் கொடுத்த புகாரின் பேரில் என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரியாது. என் கணவரின் வருமானத்தை சார்ந்து 2, 3 மற்றும் 4 மனுதாரர்கள் வாழவில்லை என்றால் சரி தான். என் கணவர் அதிவேகமாக இருசக்கர வாகனத்தினை ஓட்டிச் சென்று அரசு பேருந்தில் மோதியதால் தான் என் கணவருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

15. இம்மனுவில் ம.சா.3 சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாவார். 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது "விபத்து நடந்தது கொடிமங்கலம்–மேலக்கால் மெயின்ரோடு என்றால் சரிதான். அந்த சாலையில் யானைக்குழாய் ரோட்டின் வடக்குபுறம் உள்ளது. சம்பவ சமயத்தில் நான் யானைக்குழாய் அருகே நின்று கொண்டிருந்தேன். நான் அந்த இடத்தில் நிற்பதாக கார்த்திக் என்பவரிடம் தகவல் கூறினேன். கார்த்திக் என்பவர் இருசக்கர வாகனத்தினை ஓட்ட அழகர் (எ) கண்ணன் பின்னால் அமர்ந்து என்னை நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அவர்கள் இருசக்கர வாகனத்தில் ரோட்டின் வடபுறமாக வந்து கொண்டிருந்தார்கள். அரசு பேருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது. அரசு பேருந்து ஓட்டுநர் பேருந்தை வேகமாக ஓட்டி வந்தார். நான் நின்ற இடத்திற்கு அருகில் ரோட்டின் வடபுற ஓரமாக விபத்து நடந்தது. எதிரே வந்த அரசு பேருந்து அது செல்ல வேண்டிய சாலையின் தெற்கு பகுதியில் வந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது. இந்த விபத்திற்கு முழு காரணம் அரசு பேருந்து ஓட்டுநர் ஆவார்" என்று சாட்சியம்

அளித்துள்ளார்.

**16.** எ.ம.சா.**1** விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தின் ஓட்டுநர் ஆவார். மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது "இறந்து போனவர் **S** டைப்பில் வரும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் தலைக்கவசம் அணிந்திருந்தார்களா என்றால் இருட்டாக இருந்ததால் தெரிய வில்லை. நான் கீழே இறங்கி பார்க்கும் போது காயம் அடைந்தவர் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்று பார்க்கவில்லை. சம்பவ இடத்திற்கு விபத்து நடந்தவுடன் எங்களது அலுவலகத்திலிருந்து டிவிஷனல் மேனேஜர் வந்து விட்டார். விபத்திற்கு நான் தான் காரணம் என்றும், இருசக்கர வாகனத்தினை ஓட்டிச் சென்றவர்கள் மீது நான் அஜாக்கிரதையாக மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் எங்களது நிர்வாகத்தால் பாதிக்கப்பட்டவர் மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார். **1**–ம் எதிர்மனுதாரரை, **2**–ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனம் தரப்பில் "விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற வழக்கு என்ன நிலையில் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. விபத்து சம்மந்தமாக என்னுடைய நிர்வாகத்திற்கு எழுத்து மூலமான அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் **S** வளைவு என்றால் சரிதான். நான் வாகனத்தினை மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ஓட்டிச்சென்றேன் என்றால் சரிதான். அந்த **S** வளைவில் ஒரு வளைவை கடந்த பின்பு அடுத்த வளைவை கடப்பதற்கு முன் விபத்து நடந்தது என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தை நான் பார்த்த போது வலது கை பக்கமாக வந்து

கொண்டிருந்தது என்றால் சரியல்ல. இடதுபுறமாக என்னுடைய பேருந்தை நோக்கி வந்தது. சம்பவ இடத்தை நான் போலீசாரிடம் அடையாளம் காட்டினேனா என்றால் இல்லை. சம்பவ இடம் எங்கு நடந்தது என்பதற்கான எந்த தடையமும் இல்லை என்றால் சரிதான். சம்பவ வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய பேருந்தின் இடது முன்புற பம்பர், இடது பக்க முகப்பு விளக்கு அதை சுற்றியுள்ள பாடிப்பகுதி முன் இருக்கை கண்ணாடிகள், வலது ஆர்ஜ் அருகே உள்ள பாடி பகுதி சேதம் ஏற்பட்டது என்றால் சரிதான்." என சாட்சியம் அளித்துள்ளார்.

**17.** எ.ம.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில் "எனக்கு முன்னால் உள்ள புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ சாட்சிகள் நீலமேகம் துரைபாண்டி ஆகியோர்கள் முன்னி லையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றால் ஆவணங் களின் அடிப்படையில் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான கர்ணன் மற்றும் சசிக்குமார் ஆகியோரிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். கர்ணன் மற்றும் சசிக்குமார் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் தவறான பாதையில் வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றும், அதனால் அவர்களுக்கு இறப்பு ஏற்பட்டது என்றும் விசாரணையில் தெரிந்து கொண்டதால் குற்ற எண்.27/2020–ல் உள்ள வழக்கானது முடிக்கப்பட்டது என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**18.** எ.ம.சா.2–ஐ 1–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் போது, விபத்து சம்மந்தமான தகவல் எங்கள் முதல் தகவல் அறிக்கையின்

படி 21.01.2020–ம் தேதி அன்று நள்ளிரவு 00.30 மணிக்கு கிடைக்கப் பெற்றது என்றால் சரி தான். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடமானது S.O.C என குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். வரைபடத்தின் அசல் என்னுடைய சி.டி.பையில் உள்ளது. மாதிரி வரைபடத்தின் அசலில் S.O.C என குறிப்பிடப்படவில்லை. ரோட்டின் அகலம் குறிப்பிடப் படவில்லை. குற்ற இறுதி அறிக்கையுடன் அசல் ஆவணங்கள் நீதித்துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும் என்ற விவரம் தெரியும். குற்ற இறுதி அறிக்கையில் Action drop என முடிக்கப்பட்டால் அந்த அறிக்கையினை பாதிக்கப்பட்டவருக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். அந்த நோட்டீஸ் யாருக்கு அனுப்பப்பட்டது என்பதற்கான குறிப்புகள் இல்லை. குற்ற இறுதி அறிக்கை நீதித்துறை நடுவருக்கு 15.5.2020–ம் தேதி அன்று அனுப்பப்பட்டுள்ளது. 11.1.2020–ம் தேதி அன்று காந்தி எனபவர் காவல்துறை ஆணையருக்கு கொடுத்த புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டதாக சி.டி.பைலில் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. பேருந்து ஓட்டுநர் கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் தவறுதலாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், அதை ஆட்சேபித்து மனுதாரர்கள் கொடுத்த புகாரினை முறையாக விசாரணை செய்யாமல் மறைக்கப் பட்டுவிட்டதா என்றால் சரியல்ல" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

19. இம்மனுவில் ம.சா.1 முதல் 3 வரையான சாட்சிகள் மற்றும் எ.ம.சா.1, 2 ஆகியோருடைய சாட்சியத்தின் படி இறந்து போன கார்த்திக் என்பவர் அதிவேகமாக வந்து எதிர் திசையில் வந்து கொண்டிருந்த அரசு பேருந்தின் மீது மோதி தானாகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என வாதுரை முன்வைத்தாலும், ம.சா.ஆ.9–ஆன மாதிரி வரைபடத்தில் சம்பவ

இடமானது, ரோட்டின் மையப்பகுதியில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் எது என்பது குறித்து குறிப்பிட்டு வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை. இம்மனுவில் அரசு பேருந்தின் ஓட்டுநர், அரசு பேருந்தை வேகமாக ஓட்டி **S** வளைவில் திரும்பும் போது விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் தான் சம்பவ இடத்திற்கு டிவிசனல் மேனேஜர் உடனடியாக வந்துவிட்டனர் என்பதும், விபத்தின் போது அரசு பேருந் திற்கு இடது முன்புற பம்பர், இடது பக்க முகப்பு விளக்கு அதை சுற்றியுள்ள பாடிப்பகுதி முன் இருக்கை கண்ணாடிகள், வலது ஆர்ஜ் அருகே உள்ள பாடி பகுதி சேதம் ஏற்பட்டுள்ளது என்பதும், இறந்துபோனவர்கள் மேற்கில் இருந்து கிழக்காக வந்து கொண்டிருந்த போது, அரசு பேருந்து கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி ரோட்டின் மையப்பகுதியில் விபத்து ஏற்பட்டுள்ளது என்பது மாதிரி வரைபடத்தின் வாயிலாக தெரிய வருகிறது. மேற்படி மா.சா.ஆ.9–ஆன மாதிரி வரைபடம் காவல் ஆய்வாளரால் தயார் செய்யப்படவில்லை என்பதும், அதனால் தான் அதில் கையெழுத்து இல்லை என்றும் தெரிய வருகிறது. விபத்திற்கு இறந்து போன கார்த்திக் என்பவரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என குற்ற இறுதி அறிக்கை **Action drop** என முடிக்கப்பட்ட நிலையில் மனுதாரர் களுக்கு காவல் துறையினரால் அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்பதும், இவ்வழக்கில் அரசு பேருந்தின் ஓட்டுநர் இரு சக்கர வாகனத்தில் வந்த கார்த்திக் என்பவருடைய வாகனத்தின் மீது மோதியவுடன் கார்த்திக் மற்றும் அழகர் (எ) கண்ணன் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்ததை தனக்கு சாதகமாக பயன்படுத்தி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. ம.சா.ஆ.9–ஆன மாதிரி வரை

படத்தில் சாலையின் மையக்கோட்டை தாண்டி சம்பவ இடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே விபத்திற்கு இறந்தவரின் கவனக்குறைவும், அரசு பேருந்தின் கவனக்குறைவும் காரணம் என தீர்வு காணப்படுகிறது.

**20.** இம்மனுவில் சம்பவத்தை நேரில் பார்த்தாக சொல்லப்படும் காந்தி என்பவர் புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். காந்தி என்பவர் கொடுத்த புகாரின் மீது காவல் துறையினரால் என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து எ.ம.சா.2 சாட்சியம் அளிக்கவில்லை. இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன கார்த்தி என்பவர் விபத்தின் போது மதுபோதையில் இருந்தார் என்பது குறித்தோ, தலைக் கவசம் அணியவில்லை என்பது குறித்தோ சாட்சியம் அளிக்க வில்லை என்பதால், விபத்திற்கு இறந்தவரின் கவனக்குறைவும், அரசு பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவும் தான் காரணம் என தீர்வு காணப் பட்டுள்ளதால், இறந்த கார்த்திக் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டிருந்தாலும், இறந்தவரின் கவனக்குறைவும், அரசுப்பேருந்தின் கவனக் குறைவும் விபத்துக்கு காரணம் என்பதால் இறந்த கார்த்திக் என்பவரின் கவனக்குறைவிற்கு 50 சதவீதம் என்றும், 2-ம் எதிர்மனுதாரரான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக ஓட்டுநரின் கவனக்குறைவு 50 சதவீதம் எனவும், இறந்த கார்த்திக் என்பவரின் பின்னால் அமர்ந்து பயணம் செய்த அழகர் என்ற கண்ணன் என்பவருக்கு 1-ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் 50 சதவீத இழப்பீட்டு தொகையும், 2-ம் எதிர்மனுதாரரான அரசு பேருந்து 50 சதவீத இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றும், இறந்துபோன கார்த்திக் என்பவருக்கு 1-ம் எதிர் மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு

செலுத்த கடமைப்பட்டவர் இல்லை என பிரச்சனை எண் 1–க்கு தீர்வு காணப்படுகிறது.

**21. பிரச்சனை 2 :–**

இம்மனுவில் எம்.சி.பி.எண்.825/2023 மனுவில் இறந்தவரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை அதிவேகம் ஆகியவற்றால் விபத்து ஏற்பட்டது என்பதால் இறந்த கார்த்திக் என்பவரின் பங்களிப்பு 50 சதவீதம் என்றும், 2–ம் எதிர்மனுதாரரான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக ஓட்டுநரின் பங்களிப்பு 50 சதவீதம் என தீர்வு காணப்படுகிறது. இம்மனுவில் 1167/2023 மனுவில் இறந்த கார்த்திக் என்பவரின் பின்னால் அமர்ந்து பயணம் செய்த அழகர் என்ற கண்ணன் என்பவருக்கு 1–ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் 50 சதவீத இழப்பீட்டு தொகையும், 2–ம் எதிர்மனுதாரரான அரசு பேருந்து 50 சதவீத இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர்கள் என தீர்வு கண்டுள்ள நிலையில் இறந்து போன கார்த்திக் என்பவர் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனமானது 1–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் விபத்து சமயத்தில் இறந்து போன கார்த்தி என்பவருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதும் தெரியவருவதாலும், இறந்த கார்த்தி என்பவருக்கு பின்னால் அமர்ந்து பயணம் செய்த அழகர் என்ற கண்ணன் இம்மனுவில் 3–ம் தரப்பினர் என்பதால் விபத்தில் ஈடுபடுத்திய வாகனமான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பேருந்து என்பதால் 2–ம் எதிர்மனு தாரர் 50 சதவீத இழப்பீடு தொகையும், 1–ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் இறந்து போன அழகர் என்ற கண்ணன் என்பவருக்கு 50 சதவீதம் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றும் பிரச்சனை எண் 2க்கு தீர்வு காணப்படுகிறது.

**22. பிரச்சனை எண்.4 எம்.சி.ஓ.பி.எண்.825/2023:-**

இம்மனுவில் 1 முதல் 4 மனுதாரர்கள் ம.சா.ஆ.22-ன் படி இறந்து போன கார்த்தி என்பவரின் தாயார் சொக்கம்மாள் என்பவரின் வாரிசு சான்றிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறந்துபோன கார்த்திக் என்பவருக்கு 1-ம் மனுதாரர் மனைவி என்பதும், 2-ம் மனுதாரர் தகப்பனார் என்பதும், 3 முதல் 5 மனுதாரர்கள் சகோதர, சகோதரிகள் என்பதும் ம.சா.ஆ.20 மற்றும் 22-ன் வாயிலாக தெரியவருகிறது. 3 முதல் 5 மனுதாரர்கள் இறந்த கார்த்திக் என்பவரைச் சார்ந்து வாழ்ந்திருக்க வில்லை, 3 முதல் 5 மனுதாரர்களுக்கு இறந்த கார்த்திக் என்பவரின் இழப்பீடு பெறத்தக்கவர் அல்லர். எனவே இறந்த கார்த்திக் என்பவரின் இழப்பீடு பெற 1, 2 மனுதாரர்கள் மட்டுமே உரிமையுள்ளவர்கள் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

23. இறந்து போனவரின் வயது 42 என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன கார்த்திக் என்பவரின் வயதை காண்பிக்கக் கூடிய ஆவணமாக ம.சா.ஆ.21-ன் படி இறந்தவரின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.21-ன்படி இறந்தவரின் வயது 42 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இறந்தவரின் வயது 42 என்று தீர்வு காணப்படுகிறது.

24. இறந்து போன கார்த்திக் என்பவர் விபத்தின் போது கொத்தனாராக வேலை பார்த்து மாதம் ரூ.25,500/-சம்பாதித்து வந்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நிரூபிக்க மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே இறந்து போன கார்த்திக் என்பவருக்கு மாத வருமானமாக ரூ.15,000/- என தீர்மானிக்கிறது.

25. இறந்து போனவரின் மாத வருமானம் ரூ.15,000/- என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. எனவே இறந்து போனவரின் வருட வருமானத்தை கணக்கிடும் பொழுது ரூ.15,000/- x 12= Rs.180000/- வருகிறது.

26. இறந்து போனவரின் வயது 42 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. National insurance Co Ltd., versus Pranay Sethi and others 2017(2) TNMAC 609(SC)- மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்வு முடிவின்படி மேற்படி தொகையில் 25% கூடுதல் வருமானமாக கணக்கிடப்பட்டு, **ரூ.180000 +45000= ரூ.225000/-என்று** எதிர்கால வளம் என்ற தலைப்பின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகிறது.

27. இறந்து போனவரின் வயது 42 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கூறிய **Smt. Sarla Verma and Ors. v. Delhi Transport Corporation and Another - 2009 (5) LW Page 561** என்ற தீர்ப்பில் கூறியுள்ள படி இறந்து போனவருக்கு பெருக்கல் குறியீடு 14 என்று நிர்ணயம் செய்யப்பட்டு, இறந்து போனவரைச் சார்ந்து இரண்டு நபர்கள் இருப்பதாலும், இறந்து போன நபரின் சொந்த செலவிற்காக மேற்படி மொத்த தொகை ரூ.225000/-லிருந்து 1/3 சதவீதம் பங்கான ரூ.75000/- கழித்தது போக இறந்து போன நபரைச் சார்ந்தவர்களுக்கான இழப்பீடு(**225000**-75000=150000) ரூ.150000x14 = ரூ.21,00,000/- எனக் கணக்கிடப்படு கிறது. 1-ம் மனுதாரர் தமது இல்வாழ்க்கையை இழந்தமைக்காகவும், 2ம் மனுதாரர் தமது தகப்பனாரை இழந்தமைக் காகவும், தலா ரூ.40,000/- கிடைக்கத்தக்கது என்றும், ஈமக்கிரிகை செலவிற்காக ரூ.15,000/- மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும், Loss of estate ஆக ரூ.15,000/- மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுதாரர்களுக்கு மொத்த

இழப்பீட்டுத் தொகையாக ரூ.22,10,000/−கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

28. இம்மனுவில் விபத்து ஏற்பட **2−ம்** எதிர்மனுதாரரின் கவனக் குறைவின் பங்களிப்பு 50 சதவீதம் என்றும், இறந்தவரின் கவனக் குறைவின் பங்களிப்பு 50 சதவீதம் என்றும் பிரச்சனை **2−க்கு** தீர்வு காணப்பட்டுள்ளதால் மொத்த இழப்பீட்டுத் தொகை **(ரூ.**22,10,000 **− 1105000=**ரூ.**1105000/−)**ல் **50** சதவீதம் கழித்தது போக மீதம் ரூ.**1105000/−** மட்டும் மனுதாரர்களுக்கு, 2ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என்றும் இத்தீர்ப் பாயம் முடிவு செய்கிறது.

<u>29. பிரச்சனை எண்.4 எம்.சி.ஓ.பி.எண்.1167/2023:−</u>

இம்மனுவில் 1, 2 மனுதாரர்கள் ம.சா.ஆ12−ன் படி இறந்து போன அழகர் (எ) கண்ணன் என்பவரின் வாரிசுதாரர்கள் என்பது தெரிய வருகிறது. எனவே இறந்த அழகர் என்ற கண்ணன் என்பவரின் இழப்பீடு பெற 1, 2 மனுதாரர்கள் உரிமையுள்ளவர்கள் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

30. இறந்து போனவரின் வயது 28 என்று மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன அழகர் (எ) கண்ணன் என்பவரின் வயதை காண்பிக்கக் கூடிய ஆவணமாக ம.சா.ஆ.11−ன் படி இறந்தவரின் இறப்பு சான்றிதழ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.11−ன்படி இறந்தவரின் வயது 29 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இறந்தவரின் வயது 29 என்று தீர்வு காணப்படுகிறது.

31. இறந்து போன அழகர் (எ) கண்ணன் என்பவர் விபத்தின் போது கொத்தனாராக வேலை பார்த்து மாதம் ரூ.25,500/−சம்பாதித்து வந்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நிரூபிக்க மனுதாரர்கள் தரப்பில்

ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே இறந்து போன அழகர் என்ற கண்ணன் என்பவருக்கு மாத வருமானமாக ரூ.15,000/– என தீர்மானிக்கிறது.

32. இறந்து போனவரின் மாத வருமானம் ரூ.15,000/– என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. எனவே இறந்து போனவரின் வருட வருமானத்தை கணக்கிடும் பொழுது ரூ.15,000/– x 12= Rs.180000/– வருகிறது.

33. இறந்து போனவரின் வயது 29 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. National insurance Co Ltd., versus Pranay Sethi and others 2017(2) TNMAC 609(SC)- மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்வு முடிவின்படி மேற்படி தொகையில் 40% கூடுதல் வருமானமாக கணக்கிடப்பட்டு, **ரூ.180000 +72000= ரூ.252000/–என்று** எதிர்கால வளம் என்ற தலைப்பின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகிறது.

34. இறந்து போனவரின் வயது 29 என ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கூறிய **Smt. Sarla Verma and Ors. v. Delhi Transport Corporation and Another - 2009 (5) LW Page 561** என்ற தீர்ப்பில் கூறியுள்ள படி இறந்து போனவருக்கு பெருக்கல் குறியீடு 17 என்று நிர்ணயம் செய்யப்பட்டு, இறந்து போனவர் மணமாகாதவராக இருப்பதாலும், இறந்து போன நபரின் சொந்த செலவிற்காக மேற்படி மொத்த தொகை ரூ.252000/–லிருந்து 50 சதவீதம் பங்கான ரூ.126000/– கழித்தது போக இறந்து போன நபரைச் சார்ந்தவர்களுக்கான இழப்பீடு(252000–126000=126000) ரூ.126000x 17 = ரூ.2142000/– எனக் கணக்கிடப்படுகிறது. 1, 2 மனுதாரர்கள் தமது மகனை இழந்தமைக் காகவும், தலா ரூ.40,000/– கிடைக்கத்தக்கது என்றும், ஈமக்கிரிகை செலவிற்காக ரூ.15,000/– மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும்,

Loss of estate ஆக ரூ.15,000/- மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.2252000/-கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

35. இம்மனுவில் விபத்து ஏற்பட **1-**ம் எதிர்மனுதாரரின் கவனக் குறைவின் பங்களிப்பு 50 சதவீதம் என்றும், 2-ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவின் பங்களிப்பு 50 சதவீதம் என்றும் பிரச்சனை எண்**2**க்கு தீர்வு காணப்பட்டுள்ளதால் மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ.2252000/-கிடைக்கத்தக்கது என்றும், மொத்த இழப்பீட்டுத் தொகையில் **1-**ம் எதிர்மனுதாரர் மற்றும் 2-ம் எதிர்மனுதாரர் ஆகியோர் மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக தலா 50 சதவீதமாக ரூ.1126000/- மனுதாரர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

36. 1 முதல் 5 பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதை தவிர மனுதாரர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக் கூடியதல்ல என முடிவு செய்து, அவ்வாறே இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

37. எம்.சி.ஓ.பி.எண்.825/2023:-

முடிவாக, மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 1, 2 மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகையாக ரூ.**11,05,000/-**2-ம் எதிர்மனு தாரர் வழங்க வேண்டும் என்றும், மேற்படி தொகைக்கு மனு தாக்கலான தேதியிலிருந்து (excluding the period of dismissal for default if any) தொகை செலுத்தும் தேதி வரையிலும் 7.5% வட்டியுடனும் மனு செலவு தொகையுடனும் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் மொத்த இழப்பீட்டுத் தொகையில் 1-ம் மனுதாரருக்கு ரூ.**9,05,000**/-ம் 2-ம் மனுதாரருக்கு

ரூ.2,00,000/−ம் கிடைக்கத்தக்கது என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. 1, 2 மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகைக்கான நீதிமன்றக் கட்டணத்தை செலுத்திய பின்பு தங்களது வங்கி கணக்குப் புத்தகத்தின் அசல் மற்றும் தீர்ப்புரையின் நகல் ஆகியவற்றை 2−ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனத்திடம், சமர்ப்பிக்க வேண்டும். 1, 2 மனுதாரர்களின் வங்கி கணக்கில் இழப்பீட்டுத் தொகையை 2−ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் நேரடியாக செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. 1, 2 மனுதாரர்களுக்குரிய செலவுத் தொகையை 2−ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீட்டுத் தொகைக்கு ஏற்ப செலவுத் தொகையை பிரித்து மனுதாரர்களுடைய வங்கி கணக்கில் செலுத்த உத்தரவிடப் படுகிறது.

3. மனு தாக்கலான நாள்: 13/03/2023

**4.** மனுதாரர் நீதிமன்ற கட்டணமாக ரூ.**10,423/−** செலுத்த வேண்டும். மனுதாரர் ஏற்கனவே ரூ.**100/−** செலுத்தியது போக மீதம் கூடுதல் நீதிமன்ற கட்டணம் ரூ.**10,323/−**ஐ **15** நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.

**5.** வழக்கறிஞர் கட்டணமாக ரூ.**19,550/−** நிர்ணயம் செய்யப்படு கிறது.

**6.** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.Cmp.264 to 281 of 2020 **M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr. Ayyanar and others**ல் **11/5/2020**அன்று பிறப்பித்த உத்தரவுபடி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப் படாது.

<u>38. எம்.சி.ஓ.பி.எண்.1167/2023:–</u>

முடிவாக, 1, 2 மனுதார்களின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகையாக ரூ.2252000/– 1, 2–ம் எதிர் மனுதாரர் தலா 50 சதவீதம் வழங்க வேண்டும் என்றும், மேற்படி தொகைக்கு மனு தாக்கலான தேதியிலிருந்து (excluding the period of dismissal for default if any) தொகை செலுத்தும் தேதி வரையிலும் 7.5% வட்டியுடனும் மனு செலவு தொகையுடனும் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் மொத்த இழப்பீட்டுத் தொகையில் 1, 2 மனுதாரர்களுக்கு தலா ரூ.**11,26,000**/– கிடைக்கத்தக்கது என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. 1, 2 மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகைக்கான நீதிமன்றக் கட்டணத்தை செலுத்திய பின்பு தங்களது வங்கி கணக்குப் புத்தகத்தின் அசல் மற்றும் தீர்ப்புரையின் நகல் ஆகியவற்றை 2–ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனத்திடம், சமர்ப்பிக்க வேண்டும். 1, 2 மனுதாரர்களின் வங்கி கணக்கில் இழப்பீட்டுத் தொகையை 1–ம் எதிர்மனுதாரர் நிறுவனம் 50 சதவீதமும், 2–ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் 50 சதவீதமும் நேரடியாக செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. 1, 2 மனுதாரர்களுக்குரிய செலவுத் தொகையை 1–ம் எதிர்மனுதாரர் நிறுவனம் 50 சதவீதமும், 2–ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் 50 சதவீதமும் இழப்பீட்டுத் தொகைக்கு ஏற்ப செலவுத் தொகையை பிரித்து 1, 2 மனுதாரர்களுடைய வங்கி கணக்கில் செலுத்த உத்தரவிடப் படுகிறது.

3. மனு தாக்கலான நாள்: 13/03/2023

**4.** மனுதாரர் நீதிமன்ற கட்டணமாக ரூ.**21,893/–** செலுத்த வேண்டும். மனுதாரர் ஏற்கனவே ரூ.**100/–** செலுத்தியது போக மீதம் கூடுதல் நீதிமன்ற கட்டணம் ரூ.**21,793/–**ஐ **15** நாட்களுக்குள் செலுத்த

வேண்டும்.

5. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.31,020/- நிர்ணயம் செய்யப்படு கிறது.

6. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.Cmp.264 to 281 of 2020 **M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr. Ayyanar and others**ல் 11/5/2020அன்று பிறப்பித்த உத்தரவுபடி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப் படாது.

என்னால் உத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025-ம் ஆண்டு அப்டோபர் மாதம் 30-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

N NAGALAKSHMI

Digitally signed by N NAGALAKSHMI
Date: 2025.10.30 03:48:11 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-</u>

ம.சா.1-பாண்டி
ம.சா.2-சதீஸ்வரி
ம.சா.3-காந்திராஜா

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>

ம.சா.ஆ.1 – விபத்து முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.2 – விபத்து குறிப்பேடு நகல்
ம.சா.ஆ.3 –விபத்து ஏற்படுத்திய TN-58-N-1869 வாகனத்தின் ஆர்.சி.புக் நகல்

ம.சா.ஆ.4 – விபத்திற்குட்பட்ட TN–67–BX–6318 வாகனத்தின் ஆர்.சி.புக் நகல்

ம.சா.ஆ.5 –விபத்திற்குட்பட்ட TN–67–BX–6318 வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி நகல்

ம.சா.ஆ.6 –பதிவு எண்.TN–58–N–1869 வாகனத்தின் எம்.வி.ரிப்போர்ட்

ம.சா.ஆ.7 –விபத்திற்குட்பட்ட TN–67–BX–6318 வாகனத்தின் எம்.வி.ரிப்போர்ட் நகல்

ம.சா.ஆ.8 –பதிவு எண்.TN–67–BX–6318 வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல்

ம.சா.ஆ.9 –மாதிரி வரைபடம் நகல்

ம.சா.ஆ.10 –MCOP No.1167/2023–மனுவின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல்

ம.சா.ஆ.11 –ம.சா.1–ன் மகனின் இறப்பு சான்றிதழ் நகல்

ம.சா.ஆ.12 –ம.சா.1–ன் மகனின் வாரிசு சான்றிதழ் நகல்

ம.சா.ஆ.13 –ம.சா.1–ன் ஆதார் கார்டு நகல்

ம.சா.ஆ.14 –MCOP No.1167/2023–மனுவின் 2–ம் மனுதாரரின் ஆதார் கார்டு நகல்

ம.சா.ஆ.15 –ம.சா.1ன் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.16 –MCOP No.1167/2023–மனுவின் 2–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.17 –விபத்து குறித்த 3–ம் எதிர்மனுதாரரின் கணவரின் சகோதரர் மதுரை காவல் துறை ஆணையாளருக்கு கொடுத்த புகார்

ம.சா.ஆ.18 –MCOP No.825/2023–மனுவின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல்

ம.சா.ஆ.19 –MCOP No.825/2023–மனுவின் இறப்புச் சான்றிதழ் நகல்

ம.சா.ஆ.20–MCOP No.825/2023–மனுவின் வாரிசு சான்றிதழ் நகல்

ம.சா.ஆ.21–MCOP No.825/2023–மனுவின் சொக்கம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல்

ம.சா.ஆ.22–MCOP No.825/2023–மனுவின் சொக்கம்மாள் என்பவரின் வாரிசு சான்றிதழ் நகல்

ம.சா.ஆ.23–ம.சா.2ன் ஆதார் அடையாள அட்டை நகல்

ம.சா.ஆ.24–ம.சா.2ன் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல்

ம.சா.ஆ.25–MCOP No.825/2023–மனுவின் 2–ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல்

ம.சா.ஆ.26–MCOP No.825/2023–மனுவின் 2–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.27–MCOP No.825/2023–மனுவின் 3–ம் மனுதாரரின் அதார் அடையாள அட்டை நகல்

ம.சா.ஆ.28–MCOP No.825/2023–மனுவின் 3–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.29–MCOP No.825/2023–மனுவின் 4–ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல்

ம.சா.ஆ.30–MCOP No.825/2023–மனுவின்4–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.31–MCOP No.825/2023–மனுவின் 5–ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல்

ம.சா.ஆ.32–MCOP No.825/2023–மனுவின் 5–ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.33–ம.சா.3ன் ஆதார் அடையாள அட்டை நகல்

ம.சா.ஆ.34–ம.சா.2ன் ஆதார் அடையாள அட்டை நகல்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u> :–

எ.ம.சா.1–செல்வக்குமார்

எ.ம.சா.2–பரமசிவம்

எ.ம.சா.3–நாக அர்ஜூன்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:–</u>

எ.ம.சா.ஆ.1–செல்வக்குமார் என்பவரின் பணியாளர் அடையாள அட்டை நகல்

எ.ம.சா.ஆ.2–சம்பவ வரைபடம்

எ.ம.சா.ஆ.3–பார்வை மகஜர்

எ.ம.சா.ஆ.4– பாலிசி காப்பீடு நகல்

N NAGALAKSHMI
Digitally signed by N NAGALAKSHMI
Date: 2025.10.30 03:48:36 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.

சிறப்பு மாவட்ட நீதிமன்றம்,
மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மாவட்ட இயக்கவூர்திகள் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம், மதுரை.
எம்.சி.ஓ.பி எண்825/2023
மற்றும்
எம்.சி.ஓ.பி எண்1167/2023
வரைவு / செவ்வை உத்தரவு
நாள் 30.10.2025